RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1827

# கைந்நிலையில் உள்ளுறை உவமம்

**கா. தசரதன்** [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயமுத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# Internal Parables in Kainilai

**K. Dhasaradhan** [a, *]

[a] Department of Tamil, Government Arts College (Autonomous), Coimbatore-641018, Tamil Nadu, India

* Corresponding Author: dhasaradhan9751@gmail.com

Received: 01-07-2022
Revised: 01-09-2022
Accepted: 09-09-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Intrinsic parable is when an idea of poet is expressed through parables rather than through the songs. Intrinsic parables convey a message other than the one conveyed in the song. Among the exegetical norms of internal hymns, the internal parables are considered to be the best. Kainilai is written by Pullangkaadanar and it deals extensively with the internal concepts. An internal parable is based on five elements namely verb, object, consonant, form and birth. For example, in the second song that starts with “Venta punattukku vasam utaittaka" is about the event of the villager knowing about the illegal activities and getting scorned is implicitly set. Thus, in this article, the manner in which the internal parables are governed in the text of the Kainilai, based on the five elements of verb, object, consonant, form, and birth, has been investigated. There are four songs based on verbs and seven songs with three songs each one for object, consonant and form. This article is based on comparative research and descriptive research.

**Keywords:** Kainilai, Parables, Object, Pullangkaadanar

## முன்னுரை

உலகம் என்பது பல்வகைப்பட்ட உயிரினங்களின் தொகுப்பாகும். அவற்றுள் மனிதன் ஒரு பண்பட்ட உயிரினம். கால மாற்றங்களாலும் நாகரிக வளர்ச்சியாலும் மனிதன் ஓரிடத்தில் நிலைத்த வாழ்வை மேற்கொண்டான். அவ்வாறு அமைந்த வாழ்வின் நிகழ்வுகளைப் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தினான். அதன் அடிப்படையில் அமைந்த பண்டைத் தமிழரின் வாழ்வியல் அகம் புறம் என இரண்டாக பிரிக்கப்பட்டது. அகம் இல்வாழ்க்கையைப் பற்றியும் புறம் அரசர்களின் போர், கொடை முதலான புறவாழ்க்கையைப் பற்றியும் விளக்குகின்றன. அகம் மற்றும் புறவாழ்வியலை விளக்கும் சான்றோர் செய்யுட்கள் சங்க இலக்கியங்களான பாட்டும் தொகையுமாம். சங்கப் பாடல்களின் கருத்து புலப்பாட்டு நெறிகள் தனித்துவம் உடையன. அவை உள்ளுறை உவமம், இறைச்சி, முன்னம், மரபு, உவமை, நோக்கு, மெய்ப்பாடு, வண்ணம், வனப்பு, யாப்பு ஆகியனவாம். இவற்றுள் அகவாழ்வை விளக்கும் பாடல்களின் கருத்துப் புலப்பாட்டு நெறிகளான உள்ளுறை உவமம், இறைச்சி ஆகியன தனிமனிதனின் நுண்ணிய காதல் உணர்வுகளைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் விளக்குவன.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களை அடுத்து தோன்றிய அக நூல்களுள் அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களை விளக்கும் பாடல்கள் அடங்கிய கைந்நிலை நூலும் ஒன்றாகும். இயற்றியவர் புல்லங்காடனார். திணைக்கு 12 பாடல்கள் வீதம் ஐந்திணைகளுக்கு என மொத்தம் 60 பாடல்கள்

அமைந்திருப்பதால் இந்நூலுக்கு ஐந்திணை அறுபது என்று வேறொரு பெயரும் உண்டு. இந்நூலில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் அடிப்படையில் திணைவைப்பு முறை அமைந்துள்ளது. வெண்பா வடிவில் அமைந்த இந்நூலில் 43 வெண்பாக்கள் மட்டுமே சிதையாமல் இருக்கின்றன. அதன் அடிப்படையில் கைந்நிலை என்னும் நூலில் முழுமையாக அமைந்துள்ள வெண்பாக்களில் சில பாடல்களுள் உள்ளுறை உவமம் ஆளப்பட்டுள்ள விதம் பற்றி **கைந்நிலையில் உள்ளுறை உவமம்** என்னும் தலைப்பில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## உள்ளுறை உவமம்

அகப்பாடல்களில் உவமத்தினை மட்டும் கூறி குறிப்பாக பொருளை அமைத்து உய்த்துணரச் செய்வது உள்ளுறை உவமம் ஆகும் அக இலக்கியங்களின் கருத்துப் புலப்பாட்டு நெறிகளுள் ஒன்று உள்ளுறை. இலக்கியங்களில் முடிவில்லாத இன்பத்தினைத் தருவதற்காக பயன்படுத்தப்படும் உள்ளுறை என்னும் இலக்கிய கோட்பாடானது ஐந்து வகைப்படும் என்கிறார் தொல்காப்பியர். இக்கருத்தினை விளக்கும் தொல்காப்பிய நூற்பா வருமாறு;

"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பென

கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே"

"அந்தமில் சிறப்பி னாகிய இன்ப

தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

ஐந்து பிரிவுகளில் அமைந்த உவமம் என்பது உள்ளுறை என இலக்கியங்களில் ஆளப்பெறுகிறது. இதனைத் தமிழண்ணல் அவர்கள் "உவமம் என்பது 'ஏனை உவமம்' என்பதன் வேறுபட்டு, உள்ளுறைப் பொருளைத் தருவதாகும். எனவே இதனை உள்ளுறை உவமம் என்றே ஆளுநர் தொல்காப்பியர். உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருளும் தொக்கு நின்று உணரப்படும்" என்று குறிப்பிடுகின்றார் (Subramaniyan, 2010). உவம போலி என்று அழைக்கப்படும் உள்ளுறை உவமம் வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்னும் ஐந்தன் அடிப்படையில் அமையும். உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அமையும். உவமமும் உவமிக்கப்படும் பொருளும் வேறாக அமையாமல் உவமம் கூறவே உவமிக்கப்படும் பொருளும் பெறப்படும். நுணுகி ஆராய்வார்க்கல்லாது இவ்வுள்ளுறை உவமம் புலப்படாது.

உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களில் வரும். இதனை விளக்கும் தொல்காப்பிய நூற்பா வருமாறு ;

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்

கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (Subramaniyan, 2010)

## கைந்நிலையில் உள்ளுறை உவமம்

### குறிஞ்சி

தினைப்புனம் காக்கச் சென்றத் தலைவியைத் தலைவன் கண்டு இருவரும் உடன் பட்டு களவு வாழ்வைத் தொடர்கின்றனர். தலைவியை சந்தித்து விட்டுச் சென்ற தலைவன் நெடுநாள் வராத காரணத்தினால் தலைவி மிகவும் வருந்தி அவன் மீண்டும் எப்பொழுது என்னைச் சந்தித்து வருத்தத்தினைத் தீர்ப்பான் என்று தோழியிடம் புலம்புகிறாள். இக்கருத்தினைக் குறிஞ்சி நில வருணனையைக் கூறுவதன் மூலம் உள்ளுறையாக புல்லங்காடனார் அமைத்துள்ளார். இதனை உணர்த்தும் பாடல் வருமாறு:

"வெந்த புனத்துக்கு வாச முடைத்தாகச்

சந்தன மேந்தி யருவி கொணர்ந்திடூஉம்

வஞ்ச மலைநாடன் வாரான்கொ றோழியென்

னெஞ்ச நடுங்கி வரும்”

தினைப்புனம் அறுவடை முடிந்து தீயிட்டு எரிக்கப்படும் பொழுது தோன்றும் தீநாற்றத்தினைப் போக்க, மலையில் உள்ள அருவிகள் சந்தன கட்டைகளைக் கொணரும் வளமுள்ள மலைநாட்டு தலைவனே என்று பாடல் குறிப்பிடுகின்றது. இந்நிகழ்வில் குறிஞ்சி நில இயற்கையை வருணிப்பதாக அமைந்தாலும் உள்ளுறையாக தலைவனின் செயல் தலைவியால் கடிந்துரைக்கப்பட்டுள்ளது (Chidambaranar, 2021).

தலைவனே நீ களவு வாழ்வை நீட்டித்து விட்டு தற்பொழுது என்னை சந்திக்க வருவதே இல்லை. ஆதலால் தினைப்புனம் கருகுவது போல் நம்முடைய களவு வாழ்வு ஊராரால் அலர் தூற்றப்படுகிறது. எப்பொழுது அருவிகள் சந்தன மரம் கொணர்வது போல் நம் களவு வாழ்வின் மீது ஏற்பட்டப் பழிச்சொல்லை நீக்கி வரைந்து கொள்வாய் எனத் தலைவி தலைவனை நினைந்து தோழியிடம் புலம்புவதாக அமைவது இதன் உள்ளுறை கருத்தாகும். இஃது வரைவு என்னும் பயன் நோக்கி அமைவதால் இப்பாடலை பயன் உள்ளுறை உவமம் என்னும் வகையில் அடக்கலாம்.

மலை உச்சியில் உள்ள பலாப்பழங்களை உண்ண எண்ணி இனிய சுவை உடைய மாமரத்தில் இருந்து குரங்குகள் தாவும் வளம் உடையது தலைவனின் மலைநாடு. தலைவன் இனிய சொற்களை எல்லாம் தன்னை சந்தித்து பேசினானே ஆனால் இப்பொழுது என்னை எண்ணி பார்ப்பானோ பார்க்க மாட்டானோ என்று தலைவி தோழியிடம் புலம்புவதாக பாடல் அமைகிறது.

“ஓங்கல் விழுப்பலவி னின்பம் கொளீஇய

தீங்கனி மாவின் முசுப்பாய் மலைநாடன்

றான்கலந் துள்ளாத் தகையனோ நேரிழாய்

தேங்கலந்த சொல்லிற் றெளித்து”

என வரும் பாடலில் குரங்குகளின் செயல்கள் பலவற்றுள் பழங்கள் நிறைந்த மாமரத்தில் இருந்து பலாமரத்திற்கு தாவும் செயலைப் பாடல் குறித்துள்ளது. இப்பாடலில் தலைவனின் செயல் உள்ளுறையாகக் கூறப்பட்டுள்ளது (Manickavasagan, 2017). தலைவன் தலைவியைக் கண்டு உடன்பட்டுப் பின்பு நீண்ட நாட்கள் காண வரவில்லை. தன்னை விடுத்து வேறொரு தலைவியை தலைவன் கண்டு விட்டானோ? என நினைத்து துன்பப்படுவதாக இதன் உள்ளுறை அமைகின்றது. குரங்குகள் மரம் விட்டு மரம் தாவுவது போல தலைவன் தலைவியை விடுத்து வேறொரு பெண்ணுடன் உடன்பட்டானோ? எனத் தலைவி ஐயுறுவதாக உள்ளுறையை அமைகிறது. குரங்குகளின் செயலின் மூலம் தலைவனின் செயல் உள்ளுறையாக்கப்பட்டுள்ளதால் இப்படலை வினை உள்ளுறை உவமம் என்னும் என்னும் வகையில் அடக்கலாம்.

இயற்கையால் உடன்பட்ட தலைமக்கள் நீண்ட காலம் களவு வாழ்வை மேற்கொண்டு, பின்பு தலைமகன் சில காரணங்களுக்காக தலைமகளைக் காணச் சொல்லாததால் மிகுந்த துன்பம் தோன்றியது. ஆகவே தலைமகள் என்னுடைய தோள் அவருக்கு நரகம் ஆகிவிட்டன போலும் அதனால் என்னை காண வருவதில்லை எனப் புலம்புகிறாள். இக்கருத்து தலைவனின் மலைநாட்டு யானையின் செயலின் மூலம் உள்ளுறையாகப் பெறப்படுகின்றது. இதனைப் புல்லங்காடனார்,

“இரசங்கொண் டின்றே னிரைக்குங் குரலைப்

பிரசை யிரும்பிடி பேணி வரூஉ

முரசருவி யார்க்கு மலைநாடற் கென்றொ

ணிரைய மெனக்கிடந்த வாறு.”

என வரும் பாடலின் மூலம் விளக்குகின்றார் (Manickavasagan, 2017).

வண்டுகள் தேன் கூட்டில் உள்ள தேனை உண்டு எழுப்பும் ஒலிகேட்டு பெண் யானை கூட்டைத் தேடி வரும். தேவையான அளவு தேனை உண்டு விட்டுத் தேவை முடிந்தவுடன் அவ்விடம் விட்டு அகலும். அந்நிகழ்வினைப் போல தலைவனும் முன்பு என்னைச் சந்திக்க வந்து விட்டு தற்பொழுது வருவதில்லை. ஆகவே தன் தேவை தீர்ந்தவுடன் என்னை நரகமெனக் கருதிவிட்டான் போலும் என்னும் கருத்து உள்ளுறையாக அமைக்கப்பட்டுள்ளது. தன்னுடைய மெய்யை நரகமெனத் தலைவன் நினைத்துவிட்டான் என்றுத் தலைவி நினைப்பதாக உள்ளுறை அமைவதால் இப்பாடலை மெய் உள்ளுறை உவமம் என்னும் வகையில் அடக்கலாம்.

பகற்பொழுதில் பாறைகளின் மீதேறி ஆண் குரங்குகள் வாழைப்பழங்களைப் பறித்து கன்னத்தில் அடக்கிக் கொண்டு ஓடும் வளமுடையது தலைவனின் நாடு. இக்கருத்தினை புல்லங்காடனார்,

“கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை

யெல்லுறு போழ்தி னினிய பழங் கவுட்கொண்

டொல்லென வோடு மலைநாடன் றன்கேண்மை

சொல்லச் சொறியும் வளை”

என வரும் பாடலின் மூலம் விளக்குகின்றார் (Manickavasagan, 2017).

தலைவன் பகற்குறியில் தலைவியைக் காண வந்து இன்பங்களை எல்லாம் ஒரு சேர எடுத்துக் கொள்கிறான் என்னால் அவ்வாறு இயலாததால் என்னுடைய வளைகள் கழன்று விழுகின்றன என்று குரங்குகளின் செயல்களைக் கூறி அதன் உள்ளுறையாகத் தலைவனின் செயல் விளக்கப்பட்டுள்ளதால் இப்பாடல் வினை உள்ளுறை என்னும் வகையில் அடங்கும்.

விலங்குகளிலேயே அறிவுள்ள விலங்குகளுள் யானையும் ஒன்றாகும். அந்த யானைகளே காந்தள் மலர்களைக் கண்டு நெருப்பென்று எண்ணி ஓடுகின்றன. அத்தகைய வளமுள்ள மலை நாட்டின் தலைவன் நம்மோடு கூடியிருக்கும் இன்பத்தை வெறுத்து விட்டானோ என்று தோழியிடம் தலைவி புலம்புவதாக பாடல் அமைகின்றது.

“காந்த ளரும்புகை யென்று கதவேழ

மேந்தன் மருப்பிடைக் கைவைத் தினனோக்கிப்

பாய்ந்தெழுந் தோடும் பயமலை நன்னாடன்

காய்ந்தான்கொ னங்கட் கலப்பு.”

யானை காந்தள் மலர்களை நெருப்பு என்று அஞ்சி ஓடியது போல் தலைவனும் தலைவியோடு கூடியிருக்கும் இன்பத்தினை துன்பம் என அஞ்சி காண வருவதில்லை என்பது உள்ளுறைப் பொருள் (Manickavasagan, 2017). தலைவனின் குழப்ப மனநிலையைக் குறிக்க நாட்டில் உள்ள யானையின் செயல் குறிக்கப்பட்டுள்ளது. காந்தள் மலர்களின் உருவினைக் கண்டு யானைகள் அஞ்சியதால் இப்பாடலை உரு உள்ளுறை உவமம் என்னும் வகையில் அடக்கலாம்.

இப்பாடலின் கருத்தினை

“சுரை யாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன் சுனை”

என்னும் பழம் பாடலின் கருத்துடன் ஒப்பு நோக்கலாம். தலைவனின் நாட்டில் உள்ள சுனையில் அம்மி மிதக்கின்றது; சுரை ஆழ்ந்து செல்கின்றது; யானை நீந்துகின்றது; முயல் நிலையாக இருக்கின்றது என்று பொருந்தாதச் செயல்களை புலவர் அமைத்துப் பாடுகின்றார். தலைவனின் குழப்ப நிலையை உள்ளுறையாக குறிப்பிடவே இச்செயல்கள் பழம்பாடலுள் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறல் பொருந்தும் (Manickavasagan, 2017).

## மருதம்

வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் நாற்று நடவு, களை எடுப்பு, அறுவடை முதலிய செயல்கள் நடைபெறும். இச்சமயம் களைப்பு தெரியாமல் இருக்க பாடும் பாடல் ஒலி கேட்டு எருமைகள் பயந்து ஓடி குளத்தில் பாயும். அத்தகைய வளம் உடைய நாட்டின் தலைவன் தலைவியை விடுத்து பரத்தையரை நாடிச் சென்று விட்டான். வாயில் வேண்டி வந்த பாணனிடம் எருமையின் செயல்களைத் தலைவி குறிப்பிடுகின்றாள்.

"கழனி யுழவர் கலியஞ்சி யோடித்

தழென மதவெருமை தண்கயம் பாயும்

பழன வயலூர பாணவெம் முன்னர்ப்

பொழெனப்பொய் கூறா தொழி."

இப்பாடலில் புல்லங்காடனார் எருமையின் செயல்களை விளக்கி தலைவனின் செயலை உள்ளுறையாக அமைத்துள்ள விதம் சிறப்பிற்குரியது (Manickavasagan, 2017). எருமைக்கு குளத்தில் இறங்க வேண்டும் என்ற எண்ணம் போலவே தலைவனுக்கு பரத்தையர் பால் செல்ல வேண்டும் என்று எண்ணம். ஆகவே எருமைகள் வயலில் எழுப்பப்பட்ட ஒலி இட்டு அஞ்சி குளத்தில் இறங்கியது போல் தலைவன் தலைவியின் பால் கொண்ட ஊடலை காரணமாகக் கொண்டு பரத்தையரை நாடினான் என்னும் கருத்து உள்ளுறை பாடலில் அமைந்துள்ளது சிறப்பானதாகும். எருமைகளின் செயல்கள் மூலம் தலைவனின் செயல்கள் உள்ளுறையாக்கப்பட்டுள்ளதால் இப்பாடல் வினை உள்ளுறை என்னும் வகையில் அடங்கும்.

இக்கருத்தினை அகநானூற்றுப் பாடல் ஒன்றுடன் ஒப்புநோக்கலாம். அப்பாடல் வருமாறு:

"சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்

ஊர்மடிக் கங்குலின் நோன்தலைப் பரிந்து

கூர்முள் வேலிக் கோட்டின் நீக்கி

நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய

அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை

வண்டூது பனிமலர் ஆரும் ஊர்"

என வரும் பாடலுள் எருமையின் செயலைக் குறிப்பிடுவதன் மூலம் தலைவனின் செயல் உள்ளுறையாக்கப்பட்டுள்ளது (Periyakaruppan, 1975).

தலைவனின் நாடு செங்குமுத மலர்கள், தாமரை மலர்கள், அல்லி மலர்கள், செங்கழுநீர் பூக்கள் ஒன்றோடு ஒன்று கலந்த நீர் வளம் உடையது என்று வாயில் வேண்டி வந்த பாணனிடம் தலைவி கூறுகின்றாள். புல்லங்காடனார் பாடலில் மருத நிலத்தின் இயற்கை வளம் பற்றிக் கூறினாலும் உள்ளுறையாக தலைவனின் செயலை அமைத்துள்ளார்.

"அரக்காம்ப றாமரை யஞ்செங் கழுநீ

ரொருக்கார்ந்த வல்லி யொலித்தார்க் குத்துஞ்

செருக்கார் வளவய லூரன் பொய்ப் பாண

விருக்கவெம் மில்லுள் வரல்"

என வரும் பாடலுள் குளமானது செங்குமுத மலர்கள், தாமரை மலர்கள், அல்லி மலர்கள், செங்கழுநீர் பூக்கள் போன்றவற்றை ஒரு சேர ஏற்றுக்கொள்ளும். அதுபோலத் தலைவனும் தலைவி மற்றும் பரத்தையரை ஒரு சேர ஏற்றுக்கொண்ட நிகழ்வு தலைவியால் கடிந்துரைக்கப்படுகின்றது. பாடல் நிலத்தின் வளம் பற்றி கூறினாலும், தலைவனின் ஒழுக்கம் உள்ளுறையாக்கப்பட்டுள்ளது

(Manickavasagan, 2017). இப்பாடலும் தலைவனின் செயல்களைக் உள்ளுறையாகக் குறிப்பிடுவதால் வினை உள்ளுறை உவமம் என்னும் வகையில் அடங்கும்.

## முடிவுரை

இலக்கியங்களில் முடிவில்லாத இன்பம் தருவதற்காக அமைக்கப்படுவது உள்ளுறை. உள்ளுறையானது உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐவகைப்படும். அவற்றுள் உவமம் என்பதே உள்ளுறை உவமம் அல்லது உவமப்போலி என இலக்கியங்களில் ஆளப்பெறுகிறது. தனிமனிதனின் நுண்ணிய காதல் உணர்வுகளைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் விளக்குவது உள்ளுறை உவமம். வினை, பயன், மெய், உரு, பிறப்பு என ஐந்தன் அடிப்படையில் உள்ளுறை உவமம் அமையும். கைந்நிலை நூலில் 43 சிதையாத வெண்பாக்களுள் 7 வெண்பாக்களுள் புல்லங்காடனார் உள்ளுறை உவமத்தை அமைத்துள்ள விதம் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டது. வினை அடிப்படையில் 4, 7, 37, 47 ஆகிய நான்கு பாடல்களும், பயன் அடிப்படையில் இரண்டாம் பாடலும் அமைந்துள்ளது. மேலும் மெய் அடிப்படையில் ஐந்தாம் பாடலும், உரு அடிப்படையில் ஒன்பதாம் பாடலும் அமைந்துள்ளது. அக நூல்களில் கைந்நிலை ஐந்திணை ஒழுகலாறுகளை விளக்கும் முறைமையிலும், இயற்கை நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துவதிலும், உவமைகளைக் கையாள்வதிலும், சிறப்பிடம் பெறுகின்றது.

## References

Chidambaranar, (2021) Innilai Kainilai, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Manickavasagan, G. (2017) Kainilai, Uma Pathippagam, Chennai, India.

Periyakaruppan, R. (1975) Sanga Ilakkiya Oppidu, Meenashi Puthaga Nilaiyam, Madurai, India.

Subramaniyan, S.V. (2010) Tholkappiyam thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License